மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கும்பகோணம் நகராட்சிக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபாயில் ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபாய் திருப்பித் தரப்பட்டு விட்டது. மீதி 30,000 ரூபாயைப் பொறுத்தவரை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. கும்பகோணம் நகராட்சித் தலைவரும், இந்த மன்ற உறுப்பினருமான அவர்கள் கேட்டுக் கொண்ட அந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனர் : ஏற்படுத்தப்பட்ட அந்த வட்டச் சாலைகளைத் தொடர்ந்து பராமரிக்கும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிக் குறிப்பாகத் தகவல் இல்லை. ஊராட்சி மன்ற ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படலாம்.

* 143 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received in 1968 from the Municipal Council, Kumbakonam for conducting a raffle to meet Mahamaham expenditure; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இச் செயற்குறிப்பு ஏற்கப்படவில்லை.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : அனைத்திந்தியாவிலும் இருந்து மக்கள் லட்சக் கணக்கில் குழுமிய காரணத்தால் கும்பகோணம் நகராட்சிக்குப் பெரும் செலவு ஏற்பட்டிருக்கிறது. அந்தச் செலவை ஈடுகட்ட மானியமாவது கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே சொன்னேன். தேவையான, நேரத்தில் தேவையான மானியத்தை நிதி நிலைக்குத் தக்கபடி அரசாங்கம் கொடுத்திருப்பதை கும்பகோணம் நகராட்சித் தலைவர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். அந்தச் செலவை ஈடு கட்டுவதற்காக பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்கவில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறதா ? அரசாங்கம் என்ன தாக்கீது அனுப்பியது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி கும்பகோணம் நகராட்சியைப் பற்றியது.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவிற்காக செலவான தொகை 5 லட்சம் ரூபாயை சர்க்கார் கொடுத்ததா அல்லது அந்த மாவட்ட பஞ்சாயத்து யூனியன்கள் வசூல் செய்ததா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஐந்து லட்சம் ரூபாய் மாவட்டக் கழகத்தில் இருந்து கணிக்கப்பட்ட இருப்பு நிதியிலிருந்து செலவு செய்வதற்கான அனுமதியை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அரசாங்கம் ஏற்கனவே அனுப்பியது.

திரு. நா. காசிராமன் : கும்பகோணம் நகராட்சியால் பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்று கேட்கப்பட்டது மகாமகம் விழாவிற்காக செலவான தொகையை ஈடுகட்டும் வகையில் வருவாயைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதற்காகத்தான் கேட்கப்பட்டது. ஆனால் அந்தச் செயற்குறிப்பு ஏற்கப்படவில்லை.